©

தமிழ்நாடு அரசு
2016

கையெழுத்துத் தொடர்

## பொது (பல்வகை)த் துறை

அரசாணை (நிலை) எண். 893, நாள் 14.11.2016

துன்முகி, ஐப்பசி – 29

திருவள்ளுவர் ஆண்டு 2047

விடுமுறை நாட்கள் – 1881 ஆம் ஆண்டு செலவாணி முறிச்சட்டத்தின் கீழ் மாநில அரசு அலுவலகங்களுக்கும் தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு வங்கிகள் உட்பட அனைத்து வணிக வங்கிகளுக்கும் 2017–ஆம் ஆண்டிற்கான பொது விடுமுறை நாட்கள் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

படிக்கவும்:

1. அரசாணை (நிலை) எண்.1325, பொது (பல்வகை)த் துறை, நாள் 30.11.2015.
2. இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடித எண். HRMD(Che)/31/03.02.091/2016-17, நாள்.04.07.2016.

*****

**ஆணை:**

2017 ஆம் ஆண்டிற்கான பொது விடுமுறை நாட்கள் தொடர்பாக பின்வரும் ஆணையினை தமிழ்நாடு அரசு வெளியிடுகிறது:-

(I) **பொது விடுமுறை நாட்கள்:** இந்த ஆணையில் இணைக்கப்பட்ட அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட விடுமுறை நாட்கள், 1881 ஆம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின் (மத்தியச் சட்டம் XXVI/1881) கீழ் அறிவிக்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும்.

(II) **அரசு விடுமுறை நாட்கள்:** தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அனைத்து அலுவலகங்களும், பின்வரும் நாட்களில் மூடப்படவேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது:-

அ) இந்த ஆணையில் இணைக்கப்பட்ட அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட நாள் (01.04.2017) அன்று முழு ஆண்டு வங்கிக் கணக்கு முடிவு நீங்கலாக.

ஆ) 2017 ஆம் ஆண்டின் அனைத்து சனிக்கிழமைகளும் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளும்.

த.பி.பா

2. மேலே அறிவிக்கையிடப்பட்ட பொது விடுமுறை நாட்கள், மாநில அரசின் அனைத்து பொதுத் துறை நிறுவனங்கள்/ கழகங்கள் / வாரியங்கள் முதலியவற்றுக்கும் பொருந்தும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பா. இராம மோகன ராவ்
அரசு தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

பணி மேலாளர், அரசு மைய அச்சகம்,
சென்னை–79. (தமிழ்நாடு அரசிதழில் வெளியிடுவதற்காக)
அனைத்து அரசுச் செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை–9.
செயலாளர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகள், சென்னை–9.
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட நீதிபதிகள்.
அனைத்து நீதித்துறை மாஜிஸ்திரேட்டுகள்.
அனைத்து பொதுத் துறை நிறுவனங்கள்/ கழகங்கள் / அனைத்து நகராட்சிகள்/
அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள் / அனைத்து பேரூராட்சிகள்.
இந்திய ரிசர்வ் வங்கி, சென்னை–1 மற்றும் ஏனைய முன்னணி வங்கி நிறுவனங்கள்.
முதலமைச்சரின் செயலாளர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
தனி அலுவலர், முதலமைச்சரின் தனிப்பிரிவு, சென்னை–9.
ஆளுநரின் செயலாளர், ராஜ்பவன், சென்னை–22.
தகவல் ஆணையம், தேனாம்பேட்டை, சென்னை–18.
செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.
செயலாளர், மாநில மனித உரிமைகள் ஆணையம், திருவரங்கம் கட்டிடம்,
143, பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலை, சென்னை–28.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–104.
பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை, மதுரை.
இயக்குநர், செய்தி மற்றும் பொதுத் தொடர்பு, தலைமைச் செயலகம், சென்னை–9.
தலைமைச் செயலாளர், ஆந்திர பிரதேச அரசு, ஹைதராபாத்.
தலைமைச் செயலாளர், தெலுங்கானா அரசு, ஹைதராபாத்.
தலைமைச் செயலாளர், கர்நாடக அரசு, பெங்களூரு.
தலைமைச் செயலாளர், கேரள அரசு, திருவனந்தபுரம்.
தலைமைச் செயலாளர், புதுச்சேரி அரசு, புதுச்சேரி.
அனைத்து முன்னணி (ம) சமய நிறுவனங்கள்.
அங்கீகரிக்கப்பட்ட அனைத்து பணி நிறுவனங்கள்.
மாநிலத்திலுள்ள அனைத்து பல்கலைக் கழகங்கள்.
அனைத்து வர்த்தக மன்றங்கள்.
மத்திய அரசின் அனைத்து அமைச்சகங்கள் மற்றும் ஏனைய மாநில அரசுகள்.
பொது மேலாளர், தெற்கு ரயில்வே, சென்னை–3.

அனைத்து மத்திய அரசு அலுவலகங்கள்.
மண்டல மேலாளர், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம், சென்னை–2.
தலைவர், துறைமுக பொறுப்புக் கழகம், சென்னை–1.
துணைத் தலைமை தகவல் அதிகாரி, செய்தி தகவல் அமைப்பு,
மத்திய அரசு, சென்னை–6.
இயக்குநர், தேசிய தகவல் மையம், சென்னை–9.

<u>நகல்:</u>
மாண்புமிகு பேரவைத் தலைவரின் நேர்முக உதவியாளர்,
சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
அமைச்சர்களின் அனைத்து முதுநிலை நேர்முக உதவியாளர்கள்,
தலைமைச் செயலகம், சென்னை–9.
தலைமைச் செயலாளரின் தனிச்செயலர், தலைமைச் செயலகம், சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், பொதுத்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

14/11/16

பிரிவு அலுவலர்.

17/11/2016

## அறிவிக்கை

மத்திய அரசின் உள்துறை விவகாரங்கள் அமைச்சகத்தின் 08.06.1957 ஆம் நாளிட்ட பொது–1, 20–25–26ஆம் எண் அறிவிக்கையின்படி 1881 ஆம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின் (மத்தியச் சட்டம் XXVI/1881) 25ஆம் பிரிவில் "விளக்கம்" என்பதன் கீழ், பொது விடுமுறை நாட்களாக குறிப்பிடப்பட்ட "ஞாயிற்றுக் கிழமைகளுடன்" பின்வரும் நாட்களும், 2017 ஆம் ஆண்டிற்கான பொதுவிடுமுறை நாட்களாக கொள்ளப்படும் என தமிழ்நாடு அரசு இதனால் அறிவிக்கிறது.

## இணைப்பு

| வ. எண் | பொது விடுமுறை | தேதி | நாள் |
|---|---|---|---|
| 1 | ஆங்கிலப் புத்தாண்டு | 01.01.2017 | ஞாயிற்றுக்கிழமை |
| 2 | பொங்கல் | 14.01.2017 | சனிக்கிழமை |
| 3 | திருவள்ளுவர் தினம் | 15.01.2017 | ஞாயிற்றுக்கிழமை |
| 4 | உழவர் திருநாள் | 16.01.2017 | திங்கட்கிழமை |
| 5 | குடியரசு தினம் | 26.01.2017 | வியாழக்கிழமை |
| 6 | தெலுங்கு வருடப் பிறப்பு | 29.03.2017 | புதன்கிழமை |
| 7 | * வங்கிகள் ஆண்டு கணக்கு முடிவு (வணிக / கூட்டுறவு வங்கிகள்) | 01.04.2017 | சனிக்கிழமை |
| 8 | மகாவீர் ஜெயந்தி | 09.04.2017 | ஞாயிற்றுக்கிழமை |
| 9 | தமிழ்ப் புத்தாண்டு/ புனித வெள்ளி மற்றும் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் பிறந்த தினம் | 14.04.2017 | வெள்ளிக்கிழமை |
| 10 | மே தினம் | 01.05.2017 | திங்கட்கிழமை |
| 11 | ரம்ஜான் (Idu'l Fitr) | 26.06.2017 | திங்கட்கிழமை |
| 12 | கிருஷ்ண ஜெயந்தி | 14.08.2017 | திங்கட்கிழமை |
| 13 | சுதந்திர தினம் | 15.08.2017 | செவ்வாய்க்கிழமை |
| 14 | விநாயகர் சதுர்த்தி | 25.08.2017 | வெள்ளிக்கிழமை |
| 15 | பக்ரீத் | 02.09.2017 | சனிக்கிழமை |

| | | | |
|---|---|---|---|
| 16 | ஆயுத பூஜை | 29.09.2017 | வெள்ளிக்கிழமை |
| 17 | விஜயதசமி | 30.09.2017 | சனிக்கிழமை |
| 18 | மொகரம் | 01.10.2017 | ஞாயிற்றுக்கிழமை |
| 19 | காந்தி ஜெயந்தி | 02.10.2017 | திங்கட்கிழமை |
| 20 | தீபாவளி | 18.10.2017 | புதன்கிழமை |
| 21 | மிலாதுன் நபி | 01.12.2017 | வெள்ளிக்கிழமை |
| 22 | கிருஸ்துமஸ் | 25.12.2017 | திங்கட்கிழமை |

* தமிழ்நாட்டிலுள்ள வணிக வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளுக்கு மட்டுமே பொருந்தும்.

பா.இராம மோகன ராவ்
அரசு தலைமைச் செயலாளர்

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

14/11/16
பிரிவு அலுவலர்.
14/11/2016